## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.154/2020** **Date:14.08.2024**
**(P.W–1 )**

திரு. குமாரசாமி த/பெ.கருப்பனகவுண்டர்
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) 09.01.2017 ம் தேதி பிரதிவாதிகளுக்கு நான் கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் 1 ம் பிரதிவாதி கனகராஜுக்கு 147/1–ல் 50 செண்ட் கிழபுற பகுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதிக்கு மேபுறம் 50 செண்ட் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். கிரைய பத்திரம் தனித்தனியாக இரண்டு பத்திரமாக எழுதிக்கொடுத்துள்ளேன். கிரையம் கொடுத்த போது அது விவசாய பூமி என்றால் சரிதான். மில் கட்டுவதற்காக வாங்கினார்கள் என்றால் சரியல்ல. தரி குடோன் போடுவதாக சொல்லி தான் வாங்கினார்கள். வாங்கி எத்தனை நாட்களின் குடோன் கட்டினார்கள் என்றால் 4 மாதம் கழித்து கட்டினார்கள். பிரதிவாதிகள் இருவரும் தருமபுரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள். பிரதிவாதிகள் கிரையம் பெற்ற ஒரே மாதத்தில் மில் கட்ட முயற்சி செய்தார்கள் என்றும், அந்த சமயத்தில் வாஸ்சுது நபரை அழைத்து வந்து காண்பித்த போது பூமி அளந்து பார்த்துவிட்டு 1 ம் பிரதிவாதி கனகராஜ் வாங்கிய இடத்தில் சுமார் 4 சென்ட் தென்புறமாக என்னுடைய இடத்திற்குள் வந்தது என்றும், அது சமயமாக பஞ்சாயத்து நடந்தது என்றும், அந்த சமயத்தில் கணேசன், எஸ்.பி.சுப்பிரமணியம், சண்முகம் ஆகியோர்களை வைத்து பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் சரியல்ல.

2) என்னுடைய இடத்தில் 4 செண்ட் இடம் எடுத்துக்கொண்டு 2 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் மேல்புறத்தில் தென்கோட்டில் என்னுடைய பூமிக்கு இணையாக 4 செண்ட் எனக்கு விட்டுவிட வேண்டியது என்று பேசி முடித்து சர்வேயர் வைத்து அளந்து வரைப்படம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல.

நான் தான் பணம் கட்டி அளந்தேன். சர்வேயர் அளந்த படி என்னுடைய பூமியில் வடகிழக்கு பிரதிவாதிகளுக்கு ஒதுக்கிவிட்டு அவர்களுடைய பூமியை வடமேற்கு பகுதியை என்னுடைய பூமி வடமேற்கு பகுதியை சேர்த்து நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. உட்பிரிவு மாற்றி செய்துள்ளார்கள். பிரதிவாதிகள் மில் கட்ட ஆரம்பித்த சமயத்தில் என்னிடமிருந்து பெறப்பட்ட 4 செண்ட் இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு தண்ணீர் நிறுத்துவதற்காக தென்வடல் 21 அடி கிழமேல் 10 அடி 12 ஆழதிற்கு காண்கீரிட் தொட்டி கட்டி கட்டப்பட்டது என்றால் சரியல்ல. தொட்டி கிழகோட்டில் வடகோடாக கட்டியுள்ளார்கள். பிரதிவாதிகள் தொட்டி கட்டிய போது நான் உடன் இருந்தேன் என்றால் வடகோட்டில் தண்ணீர் தொட்டி கட்டும் போது நான் உடன் இருந்தேன்.

3) பிரதிவாதிகள் எங்கள் ஊருக்கு புதியவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கட்டிடம் கட்ட நான் உதவி செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய வீட்டில் குடியிருக்க நான் அனுமதித்தேன். கட்டிடம் கட்ட மேஸ்திரி மற்றும் ஆட்களை நான் ஏற்பாடு செய்து கொடுத்தேன். நான் கூறுவது போல வடகோட்டில் பிரதிவாதிகள் தண்ணீர் தொட்டி கட்டவில்லை என்றும், என்னிடமிருந்து பெற்ற 4 செண்ட் இடத்தில் தொட்டி கட்டினார்கள் என்றும், கட்டிட வேலை முடிந்த பிறகு அந்த தொட்டியை செப்டிக் டேங்க்காக மாற்றிவிட்டார்கள் என்றால் வடகோட்டில் தான் தண்ணீர் தொட்டி கட்டினார்கள். மற்றவை அனைத்தும் பொய்யாகும். நான் பிரதிவாதிகளிடமிருந்து பெற்ற 4 செண்ட் இடத்தை நான் விவசாயம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய பூமியில் விவசாயம் செய்து வருகிறேன்.

4) ஆணையர் இடத்தை அளந்து தாக்கல செய்த வரைப்படத்தில் சிவப்பு வண்ணமிட்ட பகுதி பிரதிவாதிகள் அனுபவித்தில் உள்ளதாகவும், நீல வண்ணத்தில் குறிப்பிட்ட பகுதி என்னுடைய பூமியையும் சேர்த்து அனுபவித்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மில் கட்டும் போது செய்த பஞ்சாயத்தின் படி எங்களுக்குள் ஏற்பட்ட சமரசம் பிரச்சனைக்குரிய

இடத்தில் ரூ.3 லட்சத்திற்கு மேல் செலவு செய்து பிரதிவாதிகள் தொட்டி கட்டி செப்டிக் டேங்க் கட்டினார்கள் என்றும், அந்த சமயத்தில் நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் பிரதிவாதிகள் அவர்களுடைய இடத்தில் கட்டும்போது நான் ஆட்சேபணை செய்யவில்லை. நான் நில அளவையரை அழைந்து வந்து அளந்து அத்துகல் நட்டியதை பிரதிவாதிகள் பிடிங்கி எறிந்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னுடைய அனுமதியின் பேரிலும் சம்மதத்திலும் கட்டிடம் கட்டிய இடத்தில் ரூ.3 லட்சம் செலவு செய்து நிரந்தரமாக கட்டிய இடத்தை என்னுடைய இடம் என்று உரிமை கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.08.14 19:41:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.